**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No. 393/2021**
**Deposition of witness for prosecution –DW–1**

| | | |
|---|---|---|
| Name | : | மேனகா |
| Father Name | : | கந்தசாமி |
| Village | : | சேலம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 25th day of November 2025.

**மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன். தற்போது எனது தரப்பில் திரு காமராஜ் மற்றும் நீதிமணிக்கு இடையே ஏற்பட்ட 05.06.2018 ம் தேதி ஏற்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் அசல் எ,ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டை 16.07.2020 ம் தேதியன்று காலி செய்ததற்கான ரசீது அசல் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது

**எதிரி தரப்பு கு.வி**

நான் ஏற்கனவே முதல் விசாரணையில் நகல்களாக ஆவணங்களை குறியீடு செய்யும்போது அதற்குரிய அசல் ஆவணமானது என் கைவசம் இருந்தது என்றால் இல்லை. அப்போது யாரிடம் இருந்தது என்றால் வீட்டின் உரிமையாளரிடம் இருந்தது. ஒப்பந்தம் தரப்பினர்களுக்கிடையே ஏற்படும் பட்சத்தில் அதன் அசல் என் கைவசம் தான் இருக்க வேண்டும் என்றும்

தற்போது நான் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணமும் நகல் ஆவணமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்றாலும் தற்போது வழக்கிற்காக நான் உற்பத்தி செய்து வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது மேற்படி அசல் ஆவணம் என் கைவசம் இருந்ததா என்றால் இல்லை. எனவே தற்போது நான் மேற்படி ஆவணத்தை போலியாக தயார் செய்து தற்போது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி வீட்டில் வைத்து தான் காசோலையை கொடுத்தேன் என்றும் அதனை தற்போது நான் மறைப்பதற்காக மேற்படி சங்கதிகளை தற்போது கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் அசல் ஆவணம் கையிருப்பில் இருந்தது என்றால் நான் அதனை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் மனுவிலும் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவருக்கு ஆதரவாக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை
இல்லை